www.Padasalai.Net www.CBSEtips.in

# லொயோலா
# ஈசி பொருளியல்

# 11

புதிய வினாத்தாள் வடிவமைப்பில்
தயாரிக்கப்பட்ட சிறப்பு நூல்

www.Padasalai.Net

LESS STRAIN... SCORE MORE... LOYOLA PUBLICATION, TIRUNELVELI.
லொயோலா
பப்ளிகேஷன்ஸ்
விவேக் இல்லம் 19, ராஜ் நகர், N.G.O. 'A' காலனி,
பாளையங்கோட்டை, திருநெல்வேலி - 627 007.
போன் : 0462 - 2553186
செல் : 94433 81701, 94422 69810, 90474 74696
81110 94696, 89400 02320, 89400 02321

₹. 245/-

Less Strain Score More

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

## நூலாக்கம்

லொயோலா பப்ளிகேஷன்

**Copy right : © LOYOLA PUBLICATION.**

All rights reserved. No part of this publication may be reproduced or distributed in any form or by any means, or stored in a data base or retrieval system without the prior written Permission of the publisher.

**ஆசிரியர் :**

திரு. **B. தண்டாயுதபானி** M.A., B.Ed., M.Phil.,
முதுகலை பட்டதாரி ஆசிரியர்
சங்கர் மேல்நிலைப்பள்ளி, சங்கர்நகர்.

திரு. **S. வேதமூர்த்தி** M.A., M.A., M.Ed., M.Phil.,
முதுகலை பட்டதாரி பொருளியல் ஆசிரியர்
சொக்கலால் மேல்நிலைப்பள்ளி
முக்கூடல்.

திரு. **K. முருகன்** M.A., M.Phil., B.Ed.,
முதுகலை பட்டதாரி பொருளியல் ஆசிரியர்
மாநகராட்சி மகளிர் மேல்நிலைப்பள்ளி,
மீனாட்சிபுரம், திருநெல்வேலி சந்திப்பு.

திரு. **V. சங்கர ராமன்** M.A., M.Ed., M.Sc., Yoga
முதுகலை பட்டதாரி ஆசிரியர்
தீர்த்தபதி மேல்நிலைப்பள்ளி
அம்பாசமுத்திரம்.

திரு. **M. திருமலைநம்பி** M.A., M.Phil., B.Ed., PGD ELT
முதுகலை பட்டதாரி ஆசிரியர்
அரசு மேல்நிலைப்பள்ளி
வடக்கு அரியநாயகிபுரம்

திரு. **S. ராமன்** M.A., M.A., M.A., M.Ed., M.Phil.,
முதுகலை பட்டதாரி ஆசிரியர்
திலகர் வித்யாலயா மேல்நிலைப்பள்ளி
கல்லிடைக்குறிச்சி.

மேலாய்வு
திருமதி. **K. வித்யா** M.A., B.Ed., M.Phil.,
முதுகலை பட்டதாரி ஆசிரியை

லொயோலா
பப்ளிகேஷன்ஸ்

www.Padasalai.Net

www.Padasalai.Net www.CBSEtips.in

# உங்களோடு உள்ளன்போடு

- அன்பிற்கினிய மாணவச் செல்வங்களே
- அறிவுசார் ஆசிரியப் பெருந்தகைகளே

வணக்கமும், வாழ்த்துக்களும்

- ஈசி பொருளியல் வழிகாட்டி வாயிலாக தங்களை சந்திப்பதில் மட்டற்ற மகிழ்ச்சி.
- இவ்வழிகாட்டி 11 ஆம் வகுப்பு பொதுத் தேர்வில் முழு மதிப்பெண்கள் பெறும் வகையில் எளிய முறையில் மிக நேர்த்தியாக தயாரிக்கப்பட்டுள்ளது.
- அனைத்து பகுதி வினாக்களுக்கும் உரிய விடைகள் மிகச்சீரிய முறையில் அமைக்கப்பட்டுள்ளது. உங்களது படிப்பின் சிரமத்தை நிச்சயம் சரிசெய்யும்.
- பொதுத் தேர்வின் போது வரைபட வினாக்களுக்கு கட்டாயம் பதில் எழுதுங்கள்.
- ஓய்வு நேரங்களில் வரைபடம், அட்டவணை, தலைப்புகள், துணைத்தலைப்புகளை மீண்டும் மீண்டும் எழுதிப் பழகுங்கள்.
- உங்களது ஆசிரியரின் வழிகாட்டுதல், உங்களின் கடின உழைப்பு, பெற்றோரின் ஆசி, இந்த ஈசி பொருளியல் வழிகாட்டி, மற்றும் இறையருள் உங்களுக்கு முழுமையாய் அமையப் பெற்று தேர்வில் முழு மதிப்பெண் பெற இதயம் கனிந்த வாழ்த்துக்கள்.
- இந்த வழிகாட்டி மென்மேலும் சிறக்க நல்லோர் அறிஞர்கள், ஆசிரியப் பெருந்தகையினரின் சீரிய கருத்துக்களை அன்புடன் வரவேற்கிறோம்.

நன்றி
வாழ்க வளமுடன்

மேல் ஆய்வாளர்
**Dr. பி. மரிய ஆல்பர்ட்** M.A., M.Ed., M.Phil., Ph.D.,
முதுகலை பட்டதாரி பொருளியல் ஆசிரியர்,
தூய சவேரியார் மேல்நிலைப்பள்ளி,
பாளையங்கோட்டை

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

# பொருளடக்கம்


| அத்தியாயம் | பாடத் தலைப்புகள் | பக்கம் எண் |
|---|---|---|
| 1 | நுண்ணினப் பொருளியல் : ஓர் அறிமுகம் | 5 |
| 2 | நுகர்வுப் பகுப்பாய்வு | 27 |
| 3 | உற்பத்தி பகுப்பாய்வு | 48 |
| 4 | செலவு மற்றும் வருவாய் பற்றிய ஆய்வு | 71 |
| 5 | அங்காடி அமைப்பும் விலை நிர்ணயமும் | 90 |
| 6 | பகிர்வு பற்றிய ஆய்வு | 116 |
| 7 | இந்தியப் பொருளாதாரம் | 136 |
| 8 | இந்தியப் பொருளாதாரம் விடுதலைக்கு முன்னரும் பின்னரும் | 152 |
| 9 | இந்தியாவின் மேம்பாட்டு அனுபவங்கள் | 170 |
| 10 | ஊரகப் பொருளாதாரம் | 184 |
| 11 | தமிழ்நாட்டுப் பொருளாதாரம் | 201 |
| 12 | பொருளியலுக்கான கணித முறைகள் | 217 |
| | **அரசு பொதுத்தேர்வு வினாத்தாள் - மே 2022** | 241 |
| | **அரசு துணைத் தேர்வு வினாத்தாள் - ஆகஸ்ட் 2022** | 243 |
| | **அரசுத் பொதுத்தேர்வு வினாத்தாள் - மார்ச் 2023** | 246 |


www.Padasalai.Net

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

அத்தியாயம் 1

# நுண்ணினப் பொருளியல் : ஓர் அறிமுகம்

**சொற்களஞ்சியம்** (Glossary)

| | | |
|---|---|---|
| 1. | பற்றாக்குறை | மக்கள் என்ன விரும்புகிறார்கள் மற்றும் மக்கள் எதைப் பெற முடியும் ஆகிய இரண்டிற்கும் இடையே உள்ள இடைவெளி |
| 2. | உற்பத்தி | பயன்பாட்டை உருவாக்குதல் |
| 3. | பகிர்வு | நாட்டு வருமானம் நான்கு உற்பத்திக் காரணிகளுக்கும் பகிர்ந்தளிக்கப்படுவது. |
| 4. | சேவைகள் | பணிகள், பண்டங்களைப் போன்றே பொருளாதாரக் குணங்கள் பெற்றவை. பணிகளை உரிமையாளர்களிடமிருந்து பிரிக்க இயலாது. மேலும் அவை எளிதில் அழியக் கூடியது. |
| 5. | மதிப்பு | பரிமாற்றத்தின் மூலம் ஒரு பொருள் மற்ற பொருள்களை பெறும் சக்தியாகும். |
| 6. | விலை | பணத்தில் பண்டத்தின் மதிப்பு |
| 7 | வருமானம் | குறிப்பிட்ட காலத்தில் பணமாகவோ அல்லது பணம் அல்லாத வேறு வகையிலோ, சம்பாதித்தோ அல்லது வேறு வழியாகவோ பெறுவதாகும். |
| 8. | பகுத்தாய்வு முறை (Deductive Method) | பகுத்தாய்வு முறை என்பது தர்க்க ரீதியான ஒரு செயல் முறையாகும். பொதுக்கருத்தில் இருந்து ஒரு தனிக் கருத்தை அடைவது ஆகும். |
| 9. | தொகுத்தாய்வு முறை (Inductive Method) | தொகுத்தாய்வு முறை என்பது ஒரு செயல் அறி முறையாகும். தனிக்கருத்தில் இருந்து பொதுக்கருத்தை அடைவது ஆகும். |

www.Padasalai.Net

## பகுதி – I – புத்தக வினாக்கள்

### பகுதி – அ – ஒரு மதிப்பெண் வினாக்கள்

**சரியான (அல்லது) பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுக்கவும்.**

**1. மனிதனுடைய வாழ்க்கையின் அன்றாட நடவடிக்கைகளைப் பற்றி பொருளியல் ஆராய்கிறது என்று கூறியவர்.** [மே-2022]

அ) ஆடம் ஸ்மித் ஆ) இலயனல் இராபின்ஸ்

இ) ஆல்ஃபிரட் மார்ஷல் ஈ) சாமுவேல்சன்

**விடை : இ) ஆல்ஃபிரட் மார்ஷல்**



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



**2. பொருளாதாரத்தில் நாம் படிக்கும் அடிப்படை சிக்கல்**

அ) எண்ணற்ற விருப்பங்கள் ஆ) அளவற்ற வளங்கள்

இ) பற்றாக்குறை ஈ) நம் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கான உத்தி

**விடை : இ) பற்றாக்குறை**

**3. நுண்ணியல் பொருளியல் எதை உள்ளடக்கியது? [செப்-2020]**

அ) ஒட்டு மொத்தப் பொருளாதாரம் ஆ) பொருளாதாரத்தின் பல்வேறு துறைகள்

இ) தனிநபர் பொருளாதார நடவடிக்கைகள் ஈ) ஒட்டு மொத்த பொருளாதாரத் தொடர்பு

**விடை : இ) தனிநபர் பொருளாதார நடவடிக்கைகள்**

**4. கீழ்க்காண்பவற்றில் எது நுண்ணியல் பொருளாதாரம் சார்ந்தது? [GMQ - 18]**

அ) கடந்த ஆண்டு உண்மை உள்நாட்டு உற்பத்தி 2.5% அதிகரித்துள்ளது.

ஆ) கடந்த ஆண்டு 9.8% உழைக்கும் சக்தி வேலையின்மை நிலைப் பெற்றுள்ளது.

இ) கோதுமையின் விலை அதன் தேவையை நிர்ணயிக்கிறது.

ஈ) கடந்து ஆண்டு பொது விலை 4% அதிகரித்துள்ளது.

**விடை : இ) கோதுமையின் விலை அதன் தேவையை நிர்ணயிக்கிறது.**

**5. பொருந்தா ஒன்றைக் கண்டறிக. [GMQ - 18]**

அ) "நாடுகளின் செல்வங்கள் மற்றும் காரணங்களைக் குறித்த ஒரு விசாரணை"

ஆ) "பொருளாதாரக் கோட்பாடுகள்"

இ) "பொருளாதார அறிவியலின் இயல்பும் அதன் சிறப்பும்"

ஈ) "மற்றவை மாறாதிருக்கும் போது" **விடை : ஈ) "மற்றவை மாறாதிருக்கும் போது"**

**6. சமநிலை விலை என்பது அந்த விலையில்**

அ) எல்லாம் விற்கப்படுகிறது ஆ) வாங்குபவர்கள் பணத்தை செலவிடுகின்றனர்

இ) தேவையின் அளவும் அளிப்பின் அளவும் சமம் ஈ) மிகைத்தேவை பூஜ்ஜியம்

**விடை : இ) தேவையின் அளவும் அளிப்பின் அளவும் சமம்**

**7. நாடுகளின் செல்வத்தையும் காரணங்களையும் குறித்த ஒரு விசாரணை என்ற நூலின் ஆசிரியர் [மார்ச்-2019, 2023] [ஆகஸ்ட்-2022]**

அ) ஆல்ஃபிரட் மார்ஷல் ஆ) ஆடம் ஸ்மித்

இ) இலயன்ல் ராபின்ஸ் ஈ) பால்.அ.சாமுவேல்சன் **விடை : ஆ) ஆடம் ஸ்மித்**

**8. விருப்பங்களோடும் கிடைப்பருமையுள்ள மாற்றுவழிகளில் பயன்படத்தக்க சாதனங்களோடும் தொடர்புள்ள மனித நடவடிக்கைகளைப் பற்றிப் பயில்கின்ற அறிவியலே பொருளியலாகும் என்று இலக்கணம் வகுத்தவர்.**

அ) இலயனல் இராபின்ஸ் ஆ) ஆடம் ஸ்மித்

இ) ஆல்ஃபிரட் மார்ஷல் ஈ) பால்.அ.சாமுவேல்சன்

**விடை : அ) இலயனல் இராபின்ஸ்**

**9. தொன்மைப் பொருளாதாரத்தின் தந்தை யார்? [மார்ச்-2020]**

அ) மாக்ஸ் முல்லர் ஆ) ஆடம் ஸ்மித்

இ) கார்ல் மார்க்ஸ் ஈ) பால்.அ.சாமுவேல்சன் **விடை : ஆ) ஆடம் ஸ்மித்**



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



**10. பொருளியல் என்பது ஒரு சமூக அறிவியல் என்று கூறுவர். ஏனெனில்,**

அ) காரணம் மற்றும் விளைவுகளுக்கிடையே உள்ள தொடர்பு

ஆ) விதிகளை உருவாக்குவதற்கு தொகுத்தாய்வு முறையும், பகுத்தாய்வு முறையும் பயன்படுத்தப்படுகின்றன.

இ) பரிசோதனைகள் ஈ) மேற்கூறிய அனைத்தும்

**விடை : ஈ) மேற்கூறிய அனைத்தும்**

**11. பயன்பாடு என்பது (மார்ச்-19)**

அ) தேவையும், அளிப்பும் சமமாக இருக்கும் சமநிலைப்புள்ளி

ஆ) மனித விருப்பங்களை நிறைவு செய்யும் பண்டங்கள் பணிகளின் சக்தி

இ) பண்டங்களின் மொத்த மதிப்பு

ஈ) பண்டங்கள் மற்றும் பணிகளுக்கான விருப்பம்

**விடை : ஆ) மனித விருப்பங்களை நிறைவு செய்யும் பண்டங்கள் மற்றும் பணிகளின் சக்தி**

**12. அங்காடி என்பது** [மே-2022]

அ) பொருட்கள் வாங்கும் இடத்தை மட்டும் குறிக்கும்

ஆ) பொருட்கள் விற்கும் இடத்தை மட்டும் குறிக்கும்

இ) விலைகள் சரி செய்யும் இடத்தை மட்டும் குறிக்கும்

ஈ) மனிதர்கள் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ பொருட்கள் வாங்கும், விற்கும் முறையைக் குறிக்கும்.

**விடை : ஈ) மனிதர்கள் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ பொருட்கள் வாங்கும், விற்கும் முறையைக் குறிக்கும்.**

**13. எது பொருளாதார நல இலக்கணம் சார்ந்ததல்ல?**

அ) சாதாரண மனிதனைப் பற்றிப்படிப்பது

ஆ) பொருளாதாரம் செல்வம் மீது மட்டும் தனி கவனம் செலுத்துவதில்லை

இ) பொருளாதாரம் என்பது பருப்பொருள் நலம் சார்ந்த படிப்பு

ஈ) பொருளாதாரம் எண்ணற்ற விருப்பங்களையும், வரையறுக்கப்பட்ட வளங்களையும் பற்றியது.

**விடை : ஈ) பொருளாதாரம் எண்ணற்ற விருப்பங்களையும், வரையறுக்கப்பட்ட வளங்களையும் பற்றியது.**

**14. வளர்ச்சி இலக்கணம் என்பது**

அ) இயங்குநிலை பொருளாதார கட்டமைப்பில் தேர்ந்தெடுப்பதில் உள்ள பிரச்சனை

ஆ) எண்ணற்ற வளங்கள் மற்றும் விருப்பங்களுக்கான பிரச்சனையாகும்.

இ) செல்வத்தை உற்பத்தி செய்வதும் பகிர்வதும்

ஈ) மனிதர்களின் பருப்பொருள் சார்ந்த நலன்

**விடை : அ) இயங்குநிலை பொருளாதார கட்டமைப்பில் தேர்ந்தெடுப்பதில் உள்ள பிரச்சனை**



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



**15. பொதுவாக எந்தக் கோட்பாடு நுண்ணியல் பொருளாதாரத்தை உள்ளடக்கியுள்ளது?**

அ) விலைக் கோட்பாடு ஆ) வருமானக் கோட்பாடு

இ) வேலைவாய்ப்புக் கோட்பாடு ஈ) வணிகக் கோட்பாடு

**விடை : அ) விலைக் கோட்பாடு**

**16. ............... பரிமாற்ற மதிப்பைக் கொண்டுள்ளவை அவற்றின் உரிமையாளர் உரிமைகளை நிறுவவும், பரிமாற்றவும் முடியும்.**

அ) பண்டங்கள் ஆ) சேவைகள் இ) அங்காடிகள் ஈ) வருவாய்

**விடை : அ) பண்டங்கள்**

**17. பயன்பாட்டின் சரியான பண்புகளை அடையாளம் காண்க.**

அ) இது பயனுக்கும் சமமானது ஆ) இது நீதிநெறி முக்கியத்துவம் கொண்டது

இ) இது மகிழ்வுக்கு சமமானது ஈ) இது நுகர்வோரின் மனநிலையைச் சார்ந்தது.

**விடை : ஈ) இது நுகர்வோரின் மனநிலையைச் சார்ந்தது.**

**18. பற்றாக்குறைப் பொருளாதார இலக்கணத்தின் ஆசிரியர் யார்?**

அ) ஆடம் ஸ்மித் ஆ) மார்ஷல் இ) இராபின்ஸ் ஈ) ராபர்ட்சன்

**விடை : இ) இராபின்ஸ்**

**19. தனிக்கருத்திலிருந்து பொதுக்கருத்து பெறும் முறை** [மார்ச்-2023]

அ) பகுத்தாய்வு முறை ஆ) தொகுத்தாய்வு முறை

இ) இயல்புரை அறிவியல் ஈ) நெறியுரை அறிவியல்

**விடை : ஆ) தொகுத்தாய்வு முறை**

**20. விற்பனை செய்யும் பொருட்களை எதனால் பெருக்கினால் மொத்த வருவாய் கிடைக்கும்?** [ஆகஸ்ட்-2022]

அ) விலை ஆ) மொத்தச் செலவு

இ) இறுதி சமநிலை வருவாய் ஈ) இறுதி சமநிலைச் செலவு **விடை : அ) விலை**

## பகுதி – ஆ

**பின்வரும் வினாக்களுக்கு ஓரிரு வரிகளில் விடையளி :**

**21. பொருளியல் என்றால் என்ன?** [செப்-2020] [ஆகஸ்ட்-2022]

**விடை :** பொருளியல் என்றால் "இல்லங்களின் நிர்வாகம்" என்று பொருள்படும், ஆரம்பத்தில் அரசியல் பொருளாதாரம் என்று அழைக்கப்பட்டது பின்னர் ஆல்ஃபிரட் மார்ஷலால் பொருளியல் என்று மாற்றப்பட்டது.

**22. நுண்ணியல் பொருளியல் என்றால் என்ன?**

**விடை :** தனிப்பட்ட மனிதர்கள், இல்லங்கள் மற்றும் நிறுவனங்கள் அல்லது தொழில்களின் பொருளாதார நடவடிக்கைகளைப் பற்றி ஆராய்வது நுண்ணியல் பொருளியல் ஆகும்.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



**23. பண்டங்கள் என்றால் என்ன? (மார்ச்-20)**

**விடை :** மனித விருப்பங்களை பூர்த்தி செய்யும் பொருட்கள் மற்றும் பணிகள் பொருளியலில் பண்டங்கள் என அழைக்கப்படும்.

---

**24. பண்டங்களை பணிகளிலிருந்து வேறுபடுத்துக. (ஏதேனும் 2)**

**விடை :**

| பண்டங்கள் | பணிகள் |
|---|---|
| 1. தொட்டு உணரக்கூடியவை, உருவ வடிவமுடையவை | 1. புலனாகப் பொருட்கள் |
| 2. அதன் உரிமையாளரிடமிருந்து தனித்து காணப்படும். | 2. பணிகளை உருவாக்கு பவரிடமிருந்து பிரிக்க முடியாது. |
| 3. மாற்றக் கூடியவை, பரிமாற்ற மதிப்பு உடையவை | 3. பண்டங்களைப் போன்று பணிகளை சேமித்து வைக்க இயலாது. |

---

**25. பயன்பாட்டின் ஏதேனும் இரண்டு வகைகளைக் கூறுக. (ஏதேனும் 2)** [மே-2022]

**விடை :** 1. வடிவப் பயன்பாடு 2. காலப் பயன்பாடு 3. இடப் பயன்பாடு 4. சேவைப் பயன்பாடு 5. உடைமைப் பயன்பாடு 6. அறிவுப் பயன்பாடு

---

**26. இயல்புரை அறிவியலின் இலக்கணத்தை வரையறுக்க.**

**விடை :** இயல்புரை அறிவியல் உள்ளதை உள்ளவாறு கூறுகிறது. அதாவது பிரச்சனையை உண்மையின் அடிப்படையில், அதன் காரணங்களின் மூலம் ஆய்வு செய்கிறது.

---

**27. பகுத்தாய்வு முறையின் பொருள் கூறுக.**

**விடை :** பகுத்தாய்வு முறை என்பது முழுமைத் தொகுதியினை பற்றிய கருத்தின் அடிப்படையில் அதன் தனி அலகு ஒன்றினைப் பற்றி கருத்துக் கூறுவதாகும்.

(அல்லது)

பகுத்தாய்வு முறை என்பது பொதுக்கருத்திலிருந்து ஒரு தனிக்கருத்தை அடைவது ஆகும்.

## பகுதி – இ

**பின்வரும் வினாக்களுக்கு ஒரு பத்தி அளவில் விடையளி :**

**28. பொருளியலைப் பற்றிய பற்றாக்குறை இலக்கணத்தை விளக்குக. மேலும் அதனை மதிப்பீடு செய்க.** [மார்ச்-2023]

**விடை : இலக்கணம்**

இலயனல் ராபின்ஸ் “பொருளியல் என்பது விருப்பங்களோடும் கிடைப்பருமையுள்ள மாற்று வழிகளில் பயன்படக்கூடிய பற்றாக்குறையான சாதனங்களோடும் தொடர்புடைய மனித நடவடிக்கைகளைப் பற்றி படிக்கும் ஓர் அறிவியலே ஆகும்” என்கிறார்.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



**மதிப்பீடு :**

1. ராபின்ஸ் மனிதர்களுக்கு நலன் தரக்கூடிய, நலன் தராத பொருட்கள் என்று தரம் பிரிக்க வில்லை. இரண்டிலும் பற்றாக்குறை வளங்கள் பயன்படுத்தப்படுகிறது.
2. பொருளியல் என்பது வளங்கள் பங்கிடுவது, விலைத் தீர்மானம் மட்டுமல்ல மேலும் தேசிய வருவாய், வேலை வாய்ப்பு அனைத்தையும் உள்ளடக்கியது.
3. இராபின்ஸின் இலக்கணமானது பொருளாதார வளர்ச்சி மற்றும் முன்னேற்றம் சார்ந்த கோட்பாடுகளை உள்ளடக்கவில்லை.

---

**29. "என்ன உற்பத்தி செய்ய வேண்டும்" என்பதற்கான முக்கிய முடிவுகள் யாவை?**

**விடை :** அடிப்படைப் பொருளியில் பிரச்சனைகளில் ஒன்று என்ன உற்பத்தி செய்ய வேண்டும் என்பதாகும்.

**முக்கிய முடிவுகள் :**

1. உணவு, உடை, வீட்டுப் பொருள்களா அல்லது ஆடம்பரப் பண்டங்களை உற்பத்தி செய்வதா?
2. விவசாயப் பொருட்களா அல்லது தொழிற்சாலைப் பொருட்களை உற்பத்தி செய்வதா?
3. வளங்களை, கல்வி, சுகாதாரத்திற்கு பயன்படுத்துவதா அல்லது ராணுவப் பணிகளுக்கு பயன்படுத்துவதா?
4. நுகர்வுப் பண்டங்களை அல்லது மூலதனப்பண்டங்களை வைத்துக் கொள்வதா?
5. அடிப்படை கல்விக்கா அல்லது உயர்கல்விக்கா அதிகம் செலவு செய்வது?

---

**30. பொருளாதார நடவடிக்கைகளின் பல்வேறு வகைகளை விளக்குக.**

**விடை :**

1. பொருளியல், பொருளாதாரத்திலுள்ள அமைப்புகள், தனிமனிதர்கள் மற்றும் குழுக்களின் நடத்தைகள் ஆகியவற்றை ஆராய்கிறது.
2. இது பண்டங்கள் மற்றும் பணிகளின் நுகர்வு, உற்பத்தி மற்றும் காரணிகளுக்கான பகிர்வு ஆகியவைகளை ஆராய்கிறது.
3. சட்ட மற்றும் நிறுவன அமைப்புகளின் அடிப்படையில் பகுத்தறிவுள்ள மனிதர்களின் நடவடிக்கைகளை உள்ளடக்கியது.
4. பற்றாக்குறையான வளங்களைப் பயன்படுத்தி மனித விருப்பங்களை நிறைவேற்றுவது பற்றிய நடவடிக்கைகளாகும்.

---

**31. பணிகளின் பல்வேறு இயல்புகள் யாவை?** <u>(செப்-20)</u>

**விடை :**

**1. புலனாகாப் பொருட்கள் :** இவற்றிற்கு உருவ அடையாளம் இல்லை, ஆனால் மற்றப் பண்டங்களோடு தொடர்புடையவை. எ.கா. குறியீடு, நிறுவன நன்மதிப்பு.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



**2. பலதரப்பட்ட பண்டங்கள் :** பணிகள் பல்வேறு இடங்கள் மற்றும் கலாச்சாரப் பின்னணியில் வேறுபடுகிறது. தரத்தின் அடிப்படையில் வகைப்படுத்தப்படுகிறது.

எ.கா. இசை

**3. பணிகளை உருவாக்குபவரிடமிருந்து பிரிக்க இயலாது :** பணிகள் அதனை செயல்படுத்துபவருக்கே உரியவை. எ.கா. உழைப்பை, உழைப்பாளர்களிடமிருந்து பிரிக்க முடியாது.

**4. அழியக் கூடியவை :** பண்டங்களைப் போன்று பணிகளை சேமித்து வைக்க இயலாது.

**32. பயன்பாட்டின் முக்கிய இயல்புகள் யாவை? (மார்ச்-20) [ஆகஸ்ட்-2022]**

**விடை :**

**பயன்பாடு :** மனித விருப்பத்தை நிறைவு செய்யும் பண்டங்கள் மற்றும் பணிகளின் ஆற்றலே பயன்பாடு எனப்படும்.

**பயன்பாட்டின் இயல்புகள் :**

1. பயன்பாடு உளவியல் சார்ந்தது
2. பயன்பாடும், உபயோகமும் ஒன்றானவை அல்ல.
3. பயன்பாடும் மகிழ்ச்சியும் ஒன்றானவை அல்ல
4. பயன்பாடு தனித்தும், சார்ந்தும் இருக்கும்
5. பயன்பாடானது மனித விருப்பத்தின் தீவிரத்தைச் சார்ந்தது.
6. பயன்பாடு ஒரு உளவியல் கருத்தாகும்.
7. பயன்பாடு நீதிநெறி, ஒழுக்கநெறி, முக்கியத்துவம் கொண்டதல்ல.

**33. நுண்ணியல் மற்றும் பேரியல் பொருளியலுக்கு இடையேயான வேறுபாடுகள் யாவை? [மார்ச்-19] [GMQ - 18]**

| | நுண்ணியப் பொருளியல் | பேரியல் பொருளியல் |
|---|---|---|
| 1. | தனிப்பட்ட பொருளாதார முடிவுகளை விளக்குவது | பொருளாதாரத்தின் முழுத் தொகுதியையும் ஆராய்வது |
| 2. | பொருளாதாரத்தின் சிறுபகுதிகளை மட்டும் கணக்கில் எடுத்துக் கொள்கிறது. | நாட்டின் முழுப்பொருளாதாரத்தையும் கணக்கில் எடுத்துக் கொள்கிறது. |
| 3. | தனிப்பண்டம், காரணிகளின் விலைத் தீர்மானம் பற்றி விளக்குகிறது. | பொருளாதாரத்தின் பொது விலை நிலையோடு தொடர்புடையது |
| 4. | தனிப்பட்ட நுகர்வோர் மற்றும் உற்பத்தியாளரது உத்தம அளவு குறிக்கோளுடன் தொடர்புடையது | நாட்டின் வளர்ச்சி முறையின் உத்தம அளவுடன் தொடர்புடையது. |



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



**34. இயல்புரை பொருளியல் மற்றும் நெறியுரை பொருளியலை ஒப்பிடுக.**

| | இயல்புரைப் பொருளியல் | நெறியுரைப் பொருளியல் |
|---|---|---|
| 1. | எப்படி உள்ளது என்பதை கூறுகிறது. | எதுவாக இருக்க வேண்டும் என்பதை கூறுகிறது. |
| 2. | காரண காரியங்களை தொடர்புபடுத்துகிறது. | பரிந்துரைகளைச் செய்கிறது. |
| 3. | உண்மையின் அடிப்படையில் அமைந்தது | உண்மையின் அடிப்படையில் அமைந்ததன்று |
| 4. | வெளிப்படையானது | உள்ளார்ந்தது |

**பகுதி – ஈ – பின்வரும் வினாக்களுக்கு ஒரு பக்க அளவில் விடையளி.**

**35. பொருளியலைப் பற்றிய பல்வேறு இலக்கணங்களை ஒப்பிட்டு வேறுபடுத்துக.** [GMQ - 18]

விடை: **1. செல்வ இலக்கணம் :** "ஆடம்ஸ்மித்" [மே-2022](செப்-20)

ஆடம்ஸ்மித் "நாடுகளின் செல்வத்தின் இயல்பும், காரணங்களும் பற்றிய ஓர் ஆய்வு" 1776 என்ற தமது நூலில் "பொருளியல் என்பது செல்வத்தைப் பற்றிய ஓர் அறிவியல்" என்று வரையறுத்துள்ளார்.

**திறனாய்வு :**

1. பொருளியல் என்பது செல்வத்தை திரட்டுதல் மற்றும் செலவிடுதல் சார்ந்த நடவடிக்கைகள் ஆகும்.
2. பொருட்சார் செல்வம் என்ற ஒன்றிற்கு மட்டுமே முக்கியத்துவம்.
3. மனித நலம் புறக்கணிக்கப்படுகிறது.

**2. நல இலக்கணம் :** "ஆல்பிரட் மார்ஷல்"

ஆல்பிரட் மார்ஷல் தனது "பொருளியல் கோட்பாடுகள்" (1890) எனும் நூலில், பொருளியல் என்பது மனிதனின் அன்றாட நடவடிக்கையை படிப்பதும், பொருள் சார் நலனை அடைவதின் பொருட்டு தனி மனிதன் மற்றும் சமுதாயத்தின் செயல்பாட்டைக் குறித்து ஆராய்வது ஆகும்.

**திறனாய்வு :**

1. மார்ஷல் பொருள் சார் நலனுக்கு மட்டுமே முக்கியத்துவம் அளித்துள்ளார்.
2. நலன் என்பது பற்றி தெளிவாக கூறவில்லை.
3. நலன் என்பது மனிதன், நாடு, காலம், தகுந்தாற்போல் வேறுபடக் கூடாது.

**3. பற்றாக்குறை இலக்கணம் :** "இலயனல் ராபினிஸ்"

இலயனல் ராபினிஸ் "பொருளியல் அறிவியலின் தன்மையும் அதன் சிறப்பும்" (1932) எனும் நூலில் பொருளியல் என்பது "விருப்பங்களோடும், கிடைப்பருமையுள்ள மாற்றுவழிகளில் பயன்படக் கூடிய பற்றாக்குறையான சாதனங்களோடும் தொடர்புடைய மனித நடவடிக்கைகளைப் பற்றிய ஓர் அறிவியலே" ஆகும்.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



**திறனாய்வு :**

1. இராபின்ஸ், மனிதர்களுக்கு நலன் தரக் கூடிய, நலன் தரா பொருட்கள் என தரம் பிரிக்கவில்லை.
2. பொருளியல் என்பது நுண்ணியல் கருத்துக்கள் கூறுவது அல்ல பேரியல் நிகழ்வுகளான தேசிய வருவாய் எவ்வாறு உருவாக்கப்படுகிறது என்பதையும் உள்ளடக்கியது.

**4. வளர்ச்சி இலக்கணம் :** " சாமுவேல்சன்"

பால் அந்தோனி சாமுவேல்சன், பொருளியல் என்பது "மனிதனும், சமுதாயமும் பணத்தை பயன்படுத்தியோ அல்லது பயன்படுத்தாமலோ, மாற்று வழிகளில் பயன்படக்கூடிய பற்றாக்குறையான வளங்களைக் கொண்டு, பல்வேறு பண்டங்களை உற்பத்தி செய்து, அவற்றை தற்காலத்திலும் எதிர்காலத்திலும், மக்களுக்கிடையேயும், சமுதாய குழுக்களுக்கிடையேயும் நுகர்விற்காக எவ்வாறு பகிர்ந்தளிப்பது என்பதை தெளிவு செய்யும் இயலாகும்.

**திறனாய்வு :**

1. எல்லையற்ற இலக்குகளோடு தொடர்புடைய பற்றாக்குறையான வளங்கள் - ராபின்ஸின் கருத்தையே சாமுவேல்சனும் கூறுகிறார்.
2. இவர் காலத்தையும் சேர்த்து இயக்கத் தன்மையுடையதாக உருவாக்கியுள்ளார்.
3. இதில் உற்பத்தி, பகிர்வு, மற்றும் நுகர்வு போன்ற பல கருத்துக்கள் உள்ளன.

**முடிவுரை :**

மேற்காண் அனைத்து இலக்கணங்களிலும் சாமுவேல்சனின் வளர்ச்சி இலக்கணமே அதிக திருப்திகரமானதாக கருதப்படுகிறது.

---

**36. பொருளியலில் பகுத்தாய்வு மற்றும் தொகுத்தாய்வு முறைகளின் படிகளை விளக்குக.**

**பகுத்தாய்வு முறை :**

பொதுக் கருத்தில் இருந்து தனிக்கருத்து பெறுவது பகுத்தாய்வு முறையாகும்.

**படிகள் :**

1) எந்த பிரச்சனையை ஆராய்கிறோம் என்பதனை துல்லியமாகவும், தெளிவாகவும் ஆராய்ச்சியாளர் அறிந்திருக்க வேண்டும்.
2) தொழில் நுட்ப கருத்துகள் வரையருக்க வேண்டும். கோட்பாட்டின் எடுகோள்கள் சுருக்கமாக கூறப்பட வேண்டும்.
3) அனுமானங்களின் வாயிலாக கருதுகோள்களை உருவாக்க வேண்டும்.
4) கருதுகோள்கள் நேரடி உற்று நோக்கல் மூலமாகவும் புள்ளியில் ஆய்வு முறைகள் மூலமாகவும் சரிபார்க்கப்பட வேண்டும்.

**தொகுத்தாய்வு முறை :**

தனிக் கருத்தில் இருந்து பொதுக் கருத்தை பெறுவது தொகுத் தாய்வு முறையாகும்.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



**படிகள் :**

1) ஒரு குறிப்பிட்ட பொருளாதார நிகழ்வுகளைப் பற்றிய புள்ளி விபரங்களை சேகரித்து அவைகளை முறையாக ஒழுங்குபடுத்தி அவற்றில் இருந்து பொது முடிவுற்கு வர வேண்டும்.
2) விபரங்களை உற்றுநோக்குவது மூலம் முடிவிற்கு வருவது .
3) விபரங்களை பொதுமைப்படுத்தி கருது கோள்கள் உருவாக்கல்.
4) கருதுகோள்களை சரிபார்த்தல்.

---

**37. பொருளியலின் தன்மையையும் எல்லையையும் விவரி.**

[மார்ச்-2020, 2023][ஆகஸ்ட்-2022]

**பொருளியலின் தன்மைகள் :**

பொருளியலின் தன்மையினை ,குறிப்பிட்ட சில பொருளியல் அறிஞர்களின் பவ்வேறு வரையறைகளைப் படிப்பதன் மூலம் புரிந்துக் கொள்ளலாம்.

**i) செல்வ இலக்கணம் ;**

"நாடுகளின் செல்வத்தின் இயல்பும், காரணங்களும் பற்றிய ஓர் ஆய்வு" (1776) என்ற தனது நூலில் செல்வத்தைப் பற்றிய ஓர் அறிவியல் என்று ஆடம்ஸ்மித் வரையறுத்துள்ளார்.

**ii) நல இலக்கணம் ;**

ஆல்ஃபிரட் மார்ஷல் தன்னுடைய பொருளியல் கோட்பாடுகள் என்னும் நூலில், பொருளியல் என்பது மனிதனின் அன்றாட நடவடிக்கையை படிப்பதும், பொருள்சார் நலனை அடைவதின் பொருட்டு தனிமனிதன் மற்றும் சமுதாயத்தின் செயல்பாட்டை குறித்து ஆராய்வதும் ஆகும் எனக் கூறுகிறார்.

**iii) பற்றாக்குறை இலக்கணம் ;**

- இலயன்ஸ் ராபின்ஸ் " பொருளியல் அறிவியலின் தன்மையும் அதன் சிறப்பும் பற்றிய ஒரு கட்டுரை என்ற தமது நூலை 1932 ல் வெளியிட்டார்".
- பொருளியல் என்பது "விருப்பங்களோடும் கிடைப்பருமையுள்ள மாற்று வழிகளில் பயன்படக்கூடிய பற்றாக் குறையான சாதனங்களோடும் தொடர்புடைய மனித நடவடிக்கைகளைப் பற்றி படிக்கும் ஓர் அறிவியலே" ஆகும் என வரையறை செய்கிறார்.

**iv) வளர்ச்சி இலக்கணம் ;**

சாமுவேல்சன், பொருளியல் என்பது " மனிதனும் சமுதாயமும் பணத்தை பயன்படுத்தியோ அல்லது பயன்படுத்தாமலோ, மாற்று வழிகளில் பயன்படக்கூடிய பற்றாக்குறையான வளங்களைக் கொண்டு பல்வேறு பண்டங்களை உற்பத்தி செய்து, அவற்றை தற்காலத்திலும், எதிர்காலத்திலும், மக்களுக்கிடையேயும் சமுதாயக் குழுக்களுக்கிடையேயும் நுகர்விற்காக எவ்வாறு பகிர்ந்தளிப்பது " என்பதை தெரிவு செய்யும் இயலாகும் என்கிறார்.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



**பொருளியலின் எல்லை ;**

1. பொருளியலின் எல்லை என்பது பொருளியலின் பாடப் பொருளாகும்.
2. பொருளியல் ஒரு கலையா அல்லது ஓர் அறிவியலா மற்றும் அறிவியலாக இருப்பின் அது இயல்புரையிலோ அல்லது நெறியுரையிலா என்பதை இங்கு தெளிவுபடுத்துகிறது
3. இது பண்டங்கள் மற்றும் பணிகளின் நுகர்வு,உற்பத்தி மற்றம் உற்பத்தி காரணிகளுக்கான வருமானப் பகிர்வு ஆகியவைகளை ஆராய்கிறது.

---


**38. உற்பத்தி வாய்ப்பு வளைகோட்டைக் கொண்டு, பொருளாதாரத்தின் அடிப்படைப் பிரச்சனைகளை விவரி.** (மார்ச்-19)

**உற்பத்தி வாய்ப்பு வளைகோடு :**

ஏதேனும் இரு பொருள்களை எடுத்துக்கொண்டால் அவற்றில் எதை எவ்வளவு உற்பத்தி செய்ய வேண்டும் என்ற வினாவே உற்பத்தி வாய்ப்பு வளைகோடாகும்.

**உற்பத்தி வாய்ப்பு வளைகோட்டின் பயன்கள் :**

பல்வேறு ஆய்வுகளுக்கு உற்பத்தி வாய்ப்பு வளைகோடு பயன்படுகிறது. அவற்றில் சிலவற்றைக் காண்போம்.




**(i) தேர்ந்தெடுப்பின் பிரச்சனை :**

1. வளங்கள் பற்றாக்குறையாகவும், தேவைகள் எண்ணற்றவையாகவும் இருப்பதால் வளங்களைப் பங்கிடுவதில் சிக்கல்கள் ஏற்படுகிறது.
2. உற்பத்தி வாய்ப்பு வளைகோட்டில் பல இணைப்புகள் (பல வாய்ப்புகள்) உள்ளதால் தெரிவு சார்ந்த பிரச்சனை எழாது.

**(ii) பற்றாக்குறை எனும் கருத்து :**

1. உற்பத்தி வாய்ப்பு வளைகோட்டின் உதவியுடன் பற்றாக்குறை எனும் கருத்தை விளக்கலாம்.
2. வளங்களின் பற்றாக்குறை மூலம் ஏற்படும் சிக்கல்களை உற்பத்தி வாய்ப்பு வளைகோடு பிரதிபலிக்கிறது.

**(iii) மைய சிக்கல்களுக்கான தீர்வு :**

1. எதை எவ்வளவு உற்பத்தி செய்வது என்ற பிரச்சனைக்கான தீர்வு, உற்பத்தி வாய்ப்பு வளைகோட்டின் எந்த பகுதியை தேர்ந்தெடுப்பது என்பதில் அடங்கியுள்ளது.
2. உற்பத்தி வாய்ப்பு வளைகோட்டின் உட்பகுதியில் உள்ள புள்ளியைத் தேர்வு செய்தால் அது அந்தப் பொருளாதாரத்தில் திறனற்ற உற்பத்தி முறையையும், திறனற்ற வளங்களின் தொகுப்பையும் கொண்டுள்ளது என்பதை விளக்குகிறது.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



## பகுதி – II – கூடுதல் வினாக்கள்

### I. பொருத்துக.

**1.** a) ஆடம் ஸ்மித் - 1) பொருளாதார அறிவியலின் இயல்பும் அதன் சிறப்பும்
b) ஆல்பிரட் மார்ஷல் - 2) நிகர பொருளாதார நலம்
c) ராபின்ஸ் - 3) பொருளாதாரக் கோட்பாடுகள்
d) சாமுவேல்சன் - 4) நாடுகளின் செல்வம்

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| அ) | 3 | 4 | 2 | 1 |
| ஆ) | 1 | 2 | 3 | 4 |
| இ) | 4 | 2 | 3 | 1 |
| ஈ) | 2 | 4 | 3 | 1 |

**விடை : அ) 3 4 2 1**

**2.** a) பண்டங்கள் - 1) மனிதனால் உருவாக்கப்பட்டவை
b) பணிகள் - 2) இயற்கை
c) இலவச பண்டம் - 3) புலனாகக் கூடியவை
d) நுகர்வுப் பண்டம் - 4) புலனாகாப் பொருட்கள்

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| அ) | 1 | 2 | 3 | 4 |
| ஆ) | 2 | 4 | 3 | 1 |
| இ) | 4 | 3 | 1 | 2 |
| ஈ) | 3 | 4 | 2 | 1 |

**விடை : இ) 4 3 1 2**

### II. சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்.

**1. 'பொருளியல்' என்று ஆல்பிரட் மார்ஷலால் பெயர் மாற்றப்பட்டது.**

அ) 18ம் நூற்றாண்டு ஆ) 19ம் நூற்றாண்டு
இ) 20ம் நூற்றாண்டு ஈ) 21 ம் நூற்றாண்டு

**விடை : ஆ) 19ம் நூற்றாண்டு**

**2. ஆடம்ஸ்மித்தின், 'நாடுகளின் செல்வம்' இயற்றிய ஆண்டு**

அ) 1723 ஆ) 1890 இ) 1776 ஈ) 1932

**விடை : இ) 1776**

**3. ஆல்பிரட் மார்ஷல் ன் 'பொருளாதாரக் கோட்பாடுகள்' நூலின் ஆண்டு**

அ) 1776 ஆ) 1723 இ) 1932 ஈ) 1890

**விடை : ஈ) 1890**



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



**4. இலயன்ல் ராபின்ஸின், 'பொருளியல் அறிவியலின் தன்மையும் அதன் சிறப்பும் பற்றிய ஒரு கட்டுரை' நூல் வெளியிட்ட ஆண்டு**

அ) 1932 ஆ) 1776 இ) 1723 ஈ) 1890

**விடை : அ) 1932**

**5. அழியும் பண்டங்களுக்கு எடுத்துக்காட்டு**

அ) தொலைக்காட்சி, மரச்சாமன்கள் ஆ) மீன், பழங்கள், பூக்கள்
இ) மேசை, நாற்காலி ஈ) வாகனங்கள், மூலதனப்பண்டங்கள்

**விடை : ஆ) மீன், பழங்கள், பூக்கள்**

**6. ........... என்பது பயன்பாட்டின் ஓர் அளவீடாகும்.**

அ) விலை ஆ) யூடில்ஸ் இ) நுகர்வு ஈ) மனித விருப்பம்

**விடை : ஆ) யூடில்ஸ்**

**7. பண்டங்களின் மதிப்பை பணத்தால் குறிப்பிட்டால் அது ........... எனப்படும்**

அ) விலை ஆ) வருவாய் இ) அங்காடி ஈ) செலவு

**விடை : அ) விலை**

**8. உணவு பண்டங்களுக்காக செலவிடப்படும் செலவின் சதவீதம், மொத்த செலவு அதிகரிக்கும் போது குறையும்**

அ) மார்ஷல் விதி ஆ) ஆடம்ஸ்மித் விதி
இ) ஏங்கலின் விதி ஈ) சாமுவேல்சன் விதி

**விடை : இ) ஏங்கலின் விதி**

**9. பொருளாதார விதிகள் கருதுகோள்களாக மாறுவதற்கு பயன்படுத்தப்படும் அனுமானம்**

அ) மற்றவை மாறாமலிருக்க ஆ) காலம் மாறாமலிருக்க
இ) பணம் மாறாமலிருக்க ஈ) விருப்பம் மாறாமலிருக்க

**விடை : அ) மற்றவை மாறாமலிருக்க**

**10. பயன்பாட்டை அளக்கும் அளவு கோலாக பணத்தை மறைமுகமாக பயன்படுத்தலாம் என்று கூறியவர்**

அ) ஆடம்ஸமித் ஆ) சாமுவேல்சன்
இ) மார்ஷல் ஈ) இலயனல் ராபின்ஸ் **விடை : இ) மார்ஷல்**

**11. பொருளியல் என்பது செல்வதைப் பற்றிய ஓர் அறிவியல் " என வரையறுத்தவர் யார்? [மார்ச்-2019]**

அ)கார்ல் மார்க்ஸ் ஆ) பால் அ. சாமுவேல்சன்
இ) மாக்ஸ் முல்லா ஈ) ஆடம் ஸ்மித் **விடை : ஈ) ஆடம் ஸ்மித்**

**12. அழியும் பண்டங்களுக்கு எடுத்துக்காட்டு.......................**

அ) தொலைக்காட்சி, மரச்சாமான்கள் ஆ) மேசை,நாற்காலி
இ) மீன்,பழங்கள், பூக்கள் ஈ) வாகனங்கள்,மூலதனப் பண்டங்கள்

**விடை : இ) மீன்,பழங்கள், பூக்கள்**



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



**13. உணவு பண்டங்களுக்காக செலவிடப்படும் செலவின் சதவீதம்,மொத்த செலவு அதிகரிக்கும் போது குறையும்.**

அ) மார்ஷல் விதி ஆ) ஆடம் ஸ்மித் விதி

இ) சாமுவேல்சன் விதி ஈ) ஏங்கலின் விதி.

**விடை : ஈ) ஏங்கலின் விதி.**

**14. பயன்பாட்டை அளக்கும் அளவுகோலாக பணத்தை மறைமுகமாக பயன்படுத்தலாம் என்று கூறியவர்.**

அ) மார்ஷல் ஆ) சாமுவேல்சன் இ) ராபின்ஸ் ஈ) பிரிஷ்

**விடை : அ) மார்ஷல்**

## III. சரியான கூற்றைத் தேர்ந்தெடு :

1. அ) பயன்பாடும் உபயோகமும் ஒன்றாகும்.

ஆ) பயன்பாடும் மகிழ்ச்சியும் ஒன்றானவை.

இ) பயன்பாடு உடலியல் சார்ந்தது.

ஈ) பயன்பாடு நீதிநெறி,ஒழுக்க நெறி முக்கியத்துவம் கொண்டதல்ல.

**விடை : ஈ) பயன்பாடு நீதிநெறி,ஒழுக்க நெறி முக்கியத்துவம் கொண்டதல்ல.**

2. அ) உற்பத்தி காரணிகளின் இயல்பை உள்ளடக்கியது நுகர்வு.

ஆ)பேரியல் பொருளியல் நுண்ணினப் பொருளியலில் இருந்து மாறுபட்டது.

இ) பேரினப் பொருளியல் விலைக் கோட்பாடு என்று அழைக்கப்படுகிறது.

ஈ) உற்பத்திக் காரணிகளின் விலை நிர்ணயத்தை அறியும் பிரிவே உற்பத்தி.

**விடை : ஆ) பேரியல் பொருளியல் நுண்ணினப் பொருளியலில் இருந்து மாறுபட்டது.**

## IV. தவறான இணையை கண்டறிக :

1. அ) நுண்ணினப் பொருளியல் - 1) மதிப்புக் கோட்பாடு

ஆ) பேரினப் பொருளியல் - 2) வருமானக் கோட்பாடு

இ) பன்னாட்டு பொருளியல் - 3) மகிழ்ச்சிக் குறியீடு

ஈ) பொது நிதி - 4) நிதி நிர்வாகம்

**விடை : இ) பன்னாட்டு பொருளியல் – 3) மகிழ்ச்சிக் குறியீடு**

2. அ) ஆடம் ஸ்மித் - 1) தொன்மை காலம்

ஆ)மார்ஷல் - 2) புதிய தொன்மை காலம்

இ) ராபின்ஸ் - 3) புதிய யுகம்

ஈ) சாமுவேல்சன் - 4) பழைய யுகம்

**விடை : ஈ) சாமுவேல்சன் – 4) பழைய யுகம்**



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



## V. பொருந்தாச் சொல்லை தேர்வு செய்க :

1. அ) வடிவப் பயன்பாடு ஆ) இடப் பயன்பாடு
   இ) காலப் பயன்பாடு ஈ) மொத்த பயன்பாடு

**விடை : ஈ) மொத்த பயன்பாடு**

2. அ) நிகர பொருளாதார நலம் ஆ) செல்வ இலக்கணம்
   இ) நல இலக்கணம் ஈ) பற்றாக்குறை இலக்கணம்

**விடை : அ) நிகர பொருளாதார நலம்**

## VI. சரியான இணையை தேர்வு செய்க

1. அ) பன்னாட்டு பொருளாதாரம் - 1) பொது முதலீடு
   ஆ) சுகாதாரப் பொருளாதாரம் - 2) மருந்து விலைக் கட்டுப்பாடு
   இ) வளர்ச்சி பொருளாதாரம் - 3) சூழலியல் மற்றும் சுற்றுப்புறச்சூழல்
   ஈ) சுற்றுச்சூழல் பொருளாதாரம் - 4) மனித வளர்ச்சி குறியீடு

**விடை : ஆ) சுகாதாரப் பொருளாதாரம் – 2) மருந்து விலைக் கட்டுப்பாடு**

2. அ) சமநிலை - 1) கீன்ஸ்
   ஆ) யுடில்ஸ் - 2) மார்ஷல்
   இ) ராக்னர் பிரிஷ் - 3) இங்கிலாந்து
   ஈ) புதிய தொன்மைப் பள்ளி - 4) ஆதம் ஸ்மித்

**விடை : ஆ) யுடில்ஸ் – 2) மார்ஷல்**

## VII. தவறான கூற்றைக் கண்டறிக

1. அ) பேரியல் பொருளாதாரம் ஒட்டு மொத்த பொருளாதார நடவடிக்கைகளை விளக்குகிறது.
   ஆ) நுண்ணினப் பொருளியல் பொருளாதாரத்தின் சிறுபகுதிகளை ஆராய்க.
   இ) சுகாதாரப் பொருளாதாரம் என்பது செயல்முறை பொருளாதாரத்தின் ஒரு பகுதியாகும்.
   ஈ) பன்னாட்டு பொருளாதாரம் சூழலியல் மற்றும் சுற்றுப்புறச் சூழல் இவற்றிற்கிடையே தொடர்புடைய பிரச்சனைகளைப் பற்றி ஆராய்கிறது.

**விடை : ஈ) பன்னாட்டு பொருளாதாரம் சூழலியல் மற்றும் சுற்றுப்புறச் சூழல் இவற்றிற்கிடையே தொடர்புடைய பிரச்சனைகளைப் பற்றி ஆராய்கிறது.**

2. அ) பொருளியல் ஒரு கலை - A.C.பிகு,மார்ஷல்
   ஆ) பொருளியல் ஓர் அறிவியல் - ராபின்ஸ்,ஜோர்டன்
   இ) பொருளியல் விதிகள் போக்குரைக் கூற்றுகளாகும் - ஆடம் ஸ்மித்
   ஈ) அரசியல் பொருளாதாரம் தனது வரையறை மூலம் தனக்கு தானே குரல் வளையை நெரித்துக் கொள்கிறது - J.M. கீன்ஸ்

**விடை : இ) பொருளியல் விதிகள் போக்குரைக் கூற்றுகளாகும் – ஆடம் ஸ்மித்**



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



## VIII. கூற்று மற்றும் காரணம்

அ) (A) மற்றும் (R) இரண்டும் சரி, மேலும் (R) என்பது (A)- விற்கு சரியான விளக்கம்.

ஆ) (A) மற்றும் (R) இரண்டும் சரி, மேலும் (R) என்பது (A)- விற்கு சரியான விளக்கமல்ல.

இ) (A) சரி ஆனால் ® தவறு.

ஈ) (A) மற்றும் (R) இரண்டும் தவறு.

**1.** கூற்று (A) : பகுத்தாய்வு முறை என்பது முழுமை தொகுதியிலிருந்து கருத்தின் தனி அலகு ஒன்றினைப் பற்றி கூறுவதாகும்.

காரணம்(R) : கருதுகோள்கள் நேரடி உற்றுநோக்கல் மற்றும் புள்ளியியல் ஆய்வு முறைகள் மூலமாகவும் சரிபார்க்கப்படுகிறது

**விடை : ஆ) (A) மற்றும் (R) இரண்டும் சரி, மேலும் (R) என்பது (A)- விற்கு சரியான விளக்கமல்ல.**

**2.** கூற்று (A) : எல்லாச் சமுதாயத்திலும் சில தெரிவுகளை மேற்கொள்ள வேண்டியுள்ளது.

காரணம்(R) : வளங்கள் குறைவாகவும் நமது தேவைகள் எண்ணிலடங்காதவையாகவும் இருக்கிறது.

**விடை : அ) (A) மற்றும் (R) இரண்டும் சரி,மேலும் (R) என்பது (A)- விற்கு சரியான விளக்கம்.**

## IX. கோடிட்ட இடங்களை நிரப்புக

1. பண்டங்களின் மதிப்பை பணத்தால் குறிப்பிட்டால் அது............ எனப்படும்.

அ) வருவாய் ஆ) அங்காடி இ) விலை ஈ) செலவு

**விடை : இ) விலை**

2. ஆல்பிரட் மார்ஷலின் " பொருளாதாரக் கோட்பாடுகள் " நூலின் ஆண்டு.............

அ) 1776 ஆ) 1932 இ) 1723 ஈ) 1890

**விடை : ஈ) 1890**

3. பொருளாதார விதிகள் கருதுகோள்களாக மாறுவதற்கு பயன்படுத்தப்படும் அனுமானம்....

அ) மற்றவை மாறாமலிருக்க ஆ) காலம் மாறாமலிருக்க

இ) பணம் மாறாமலிருக்க ஈ) விருப்பம் மாறாமலிருக்க

**விடை : அ) மற்றவை மாறாமலிருக்க**

## X. இரண்டு மதிப்பெண் வினாக்கள்

**பின்வரும் வினாக்களுக்கு ஓரிரு வரிகளில் விடையளி :**

**1. பொருளியலின் பிரிவுகள் யாவை? [GMQ - 18]**

**விடை :** i. நுகர்வு, ii. உற்பத்தி, iii. பரிமாற்றம், iv. பகிர்வு

**2. பற்றாக்குறை என்றால் என்ன?**

**விடை :** மக்கள் என்ன விரும்புகிறார்கள் மற்றும் மக்கள் எதைப் பெற முடியும் ஆகிய இரண்டிற்கும் இடையே உள்ள இடைவெளி.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



**3. பகிர்வு குறிப்பு வரைக.**

**விடை :** பகிர்வு என்பது நாட்டு வருமானம் நான்கு உற்பத்திக் காரணிகளுக்கும் பகிர்ந்தளிக்கப்படுவது ஆகும்.

---

**4. மதிப்பு விளக்கம் தருக.**

**விடை :** பரிமாற்றத்தின் மூலம் ஒரு பொருள் மற்ற பொருள்களை பெறும் சக்தியாகும்.

---

**5. வருமானம் என்றால் என்ன?**

**விடை :** குறிப்பிட்ட காலத்தில் பணமாகவோ அல்லது பணம் அல்லாத வேறு வகையிலோ, சம்பாதித்தோ அல்லது வேறு வழியாகவோ பெறுவதாகும்.

---

**6. தொகுத்தாய்வு முறையின் பொருள் கூறுக.**

**விடை :** தொகுத்தாய்வு முறை என்பது தனிக் கருத்திலிருந்து பொதுக் கருத்தை அடைவதாகும்.

---

**7. 'பிற வாய்ப்புச் செலவு' என்றால் என்ன?**

**விடை :** பொதுப் பண்டங்கள் இலவசமாகவும், சிலருக்கு பணம் செலுத்துவதாலும் கிடைக்கப்பெறும். இது பொருளியலில் 'பிறவாய்ப்புச் செலவு' என்று கூறப்படுகிறது.

---

**8. பண்டங்களின் வகைகள் யாவை?** (மார்ச்-20)

**விடை :** 1. நுகர்வோர் பண்டங்கள், 2. மூலதனப் பண்டங்கள், 3. அழியும் பண்டங்கள், 4. நீடித்து இருக்கக்கூடிய பண்டங்கள்

## XI. மூன்று மதிப்பெண் வினாக்கள்

**பின்வரும் வினாக்களுக்கு ஒரு பத்தி அளவில் விடையளி :**

**1. பொருளியலின் நான்கு வரையறைகள் யாவை?**

**விடை :** ஒவ்வொரு குறிப்பிட்ட கால கட்டத்திலும் பொருளியலின் கருத்து வளர்ச்சிக்கு ஏற்ப நான்கு வரையறைகள் தரப்பட்டுள்ளன. அவை

1. தொன்மைக் காலத்தை உணர்த்தும் ஆடம்ஸ்மித்தின் செல்வ இலக்கணம்
2. புதிய தொன்மைக் காலத்தை உணர்த்தும் மார்ஷலின் நல இலக்கணம்
3. புதிய யுகத்தை உணர்த்தும் இராபின்ஸின் பற்றாக்குறை இலக்கணம்
4. நவீன யுகத்தை உணர்த்தும் சாமுவேல்சனின் வளர்ச்சி இலக்கணம்

---

**2. சாமுவேல்சனின் வளர்ச்சி இலக்கணத்தின் முக்கியக் கருத்துக்கள் யாவை?**

**விடை :**

1. எல்லையற்ற இலக்குகளோடு தொடர்புடைய சாதனங்கள் பற்றாக்குறையானவை. அவை மாற்றுப் பயனுடையவை என ராபின்ஸைப் போன்று பால் சாமுவேல்சனும் கூறுகிறார்.
2. இவ்விலக்கணம் பணம் பயன்படுத்தப்படாத, பண்டமாற்றுப் பொருளாதாரத்திற்கும் பொருந்தக் கூடியது.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



3. இவ்விலக்கணம் உற்பத்தி, பகிர்வு மற்றும் நுகர்வு போன்ற பல கருத்துக்களையும் உள்ளடக்கியது.
4. சாமுவேல்சன் பொருளியலை ஒரு சமூக அறிவியலாக கருதினார்.

**3. பொருளியல் ஒரு கலையா? அல்லது ஓர் அறிவியலா? விளக்குக.**

**1. பொருளியல் ஒருகலை :**

- கலை என்பது நடைமுறையில் உள்ள ஒரு குறிப்பிட்ட இலக்குகளை அடைய அறிவைப் பயன்படுத்துவதாகும்.
- பொருளியல் அனைத்து பொருளாதார பிரச்சனைகளுக்கும் தீர்வுகாண வழிகாட்டுகிறது.
- AC பிகு, ஆல்பிரட் மார்ஷல் மற்றும் பலர் பொருளியலை ஒரு கலையியல் என்கின்றனர்.

**2. பொருளியல் ஓர் அறிவியல் :**

- அறிவியல் என்பது ஒழுங்கு முறைப்படுத்தப்பட்ட ஓர் அறிவுத் தொகுதியாகும். தொடர்புடைய அனைத்து விவரங்களும் சேகரிக்கப்பட்டு, வகைப்படுத்தப்பட்டு, அளவிடப்பட்டு ஆய்வு செய்து அவை உண்மையென்று அறிந்த பிறகே விதியாக உருவாகிறது.
- பொருளியல் பிரச்சனைகளுக்கான காரணங்கள், உறவுகள் பற்றி ஆராய்கிறது. ஆகையால் பொருளியல் கலை மற்றும் அறிவியலாக கருதப்படுகிறது.

---

**4. நுண் பொருளியலின் முக்கியத்துவம் யாது?**

1. ஒரு பொருளாதாரத்தின் செயல்பாட்டை அறிந்து கொள்ள உதவுகிறது.
2. பொருளாதார நலனின் நிலையைப் பற்றி ஆராய்கிறது.
3. வளங்களை திறன்பட பயன்படுத்த உதவுகிறது.
4. பன்னாட்டு வாணிபத்தில் பயன்படுகிறது.
5. பயனுள்ள முடிவுகளை எடுப்பதற்கு பயன்படுகிறது.
6. வளங்களை உத்தம அளவில் பங்கிட பயன்படுகிறது.
7. விலை நிர்ணயம் செய்ய உதவுகிறது.

---

**5. பொருளியல் ஆய்வு முறைகள் எவை?**

பொருளியலில் இருவகையான ஆய்வு முறைகள் பயன்படுத்தப்படுகின்றன.

**1. பகுத்தாய்வு முறை**

- இதை பகுத்தறியும் முறை என்றும் கருத்தியலான முறை என்றும் கூறுவதுண்டு.
- பகுத்தாய்வு முறை என்பது முழுமைத் தொகுதியினை பற்றிய கருத்தின் அடிப்படையில் அதன் தனி அலகு ஒன்றினைப் பற்றி கருத்து கூறுவதாகும். அதாவது.
- "பொதுக் கருத்திலிருந்து ஒரு தனிக்கருத்தை அடைவது ஆகும்."

**2. தொகுத்தாய்வு முறை**

இது செயலறி முறை என்றும் அழைக்கப்படுகிறது. இம்முறை தனிக்கருத்திலிருந்து பொதுக் கருத்தைப் பெறுவதாகும்.

கீழ்க்காணும் முறைகளின் அடிப்படையில் பொருளியல் பொதுமைகள் பெறப்படுகின்றன.

**1. பரிசோதனைகள் 2. உற்று நோக்குதல் 3. புள்ளியியல் முறைகள்**

ஆல்பிரட் மார்ஷலின் கூற்றுப்படி "நடப்பதற்கு வலது காலும், இடது காலும் எவ்வாறு அவசியமோ, அது போல இரு முறைகளும் அறிவியல் ஆய்வுக்கு அவசியமாகும்."



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

## XII. ஐந்து மதிப்பெண் வினாக்கள்

**பின்வரும் வினாக்களுக்கு ஒரு பத்தி அளவில் விடையளி :**

**1. உற்பத்தி வாய்ப்பு வளைகோட்டினை படம் வரைந்து விளக்குக.**

**விளக்கம் :**

உற்பத்தியில் ஏதேனும் இரு பொருள்களை எடுத்துக் கொண்டால் அவற்றில் எதை எவ்வளவு உற்பத்தி செய்ய வேண்டும் என்ற வினாவிற்கு பதில் தரும் முறையை வடிவியல் சாதனம் மூலம் விளக்குவதே, உற்பத்தி வாய்ப்பு வளைகோடு எனப்படும்.

**அனுமானங்கள் :**

1. தொழில் நுட்பம் நிலையானது
2. இரு பண்டங்கள் மட்டுமே உற்பத்தி செய்ய முடியும்.
3. வளங்களை இடம் பெயரக் கூடியவை
4. முழுவேலை வாய்ப்பு நிலவுகிறது.
5. உற்பத்திக் காரணிகளின் அளவும், தரமும் கொடுக்கப்பட்டுள்ளது.
6. உற்பத்தியில் குறைந்துசெல்விதி நிலவுகிறது.


**அட்டவணை**

| உற்பத்தி வாய்ப்புகள் | உணவு உற்பத்தியின் அளவு (டன்) | வாகன உற்பத்தியின் எண்ணிக்கை |
|---|---|---|
| I | 0 | 25 |
| II | 100 | 23 |
| III | 200 | 20 |
| IV | 300 | 15 |
| V | 400 | 8 |
| VI | 500 | 0 |

**அட்டவணை விளக்கம் :**

- மேற்கண்ட அட்டவணைப்படி அனைத்து வளங்களையும் உணவு உற்பத்திக்கு பயன்படுத்தினால் 500 டன் உற்பத்தியை அடையலாம். மாறாக, வளங்கள் அனைத்தையும் வாகன உற்பத்திக்கு பயன்படுத்தினால் 25 வாகன உற்பத்தியை அடையலாம்.
- இந்த எதிர்மறையான வாய்ப்புகளுக்கு இடையில், நாம் கொஞ்சம் அளவு உணவு உற்பத்தியை விட்டுக் கொடுத்தால், நமக்கு சில மோட்டார் வாகனங்கள் கிடைக்கும்.

**வரைபடம் :**






Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



**வரைபட விளக்கம் :**

- X அச்சில் உணவு உற்பத்தியின் அளவும், Y அச்சில் வாகன எண்ணிக்கையும் காட்டப்படுகிறது.
- வரைபடத்தில் ஆறு வகையான வாய்ப்புகள் $P_1$, $P_2$, $P_3$, $P_4$, $P_5$, $P_6$ காட்டப்பட்டுள்ளது.
- வரைபடத்தைத் தாண்டி உள்ள புள்ளி 'P' அடையமுடியாத வாய்ப்பாகும். காரணம் வளங்கள் பற்றாக்குறையானவை.
- உற்பத்தி வாய்ப்பில் $'P'_7$ புள்ளியை தேர்வு செய்தால் அது பொருளாதாரத்தின் திறனற்ற உற்பத்தி முறையையும், திறனற்ற வளங்கள் தொகுப்பையும் கொண்டுள்ளது என்பதைக் காட்டுகிறது.

---

**2. பொருளியலின் வகைகளை விளக்குக.**

**விடை :**

**1. நுண்ணியல் பொருளியல் :**

தனிப்பட்ட மனிதர்கள், இல்லங்கள் மற்றும் நிறுவனங்கள் அல்லது தொழில்களின் பொருளாதார நடவடிக்கைகளைப் பற்றி ஆராய்வது நுண்ணியல் பொருளியல் ஆகும்.

**2. பேரியல் பொருளாதாரம் :**

இது ஒட்டு மொத்த பொருளாதார நடவடிக்கைகளை விளக்குகிறது. நாட்டு உற்பத்தி, பணவீக்கம், வேலையின்மை மற்றும் வரி போன்ற பல ஒட்டு மொத்தங்களைப் பற்றி படிக்கிறது.

**3. பன்னாட்டுப் பொருளாதாரம் :**

- எந்த ஒரு நாடும் தனிப்பட்ட நிலையில் வளர்ச்சி அடைய இயலாது.
- வெளிநாட்டு மூலதனம், முதலீடு, பண்ணாட்டு வாணிபம் போன்றவற்றை பன்னாட்டு பொருளியல் விளக்குகிறது.

**4. பொதுப் பொருளாதாரம் :**

- பொது நிதி, என்பது வருமானம் அதிகரிக்க மேற்கொள்ளும் நடவடிக்கையை விளக்குகிறது.
- இதில் பொதுச்செலவு, பொது வருவாய், பொதுக் கடன் போன்றவை விளக்கப்படுகிறது.

**5. வளர்ச்சிப் பொருளாதாரம் :**

தலா வருமானம், மனித மேம்பாட்டுக் குறியீடு, மகிழ்ச்சி குறியீடு ஆகியவற்றின் அடிப்படையில், நாடுகள் வளர்ச்சியடைந்த நாடுகள், வளர்ந்து வரும் நாடுகள், பின்தங்கிய நாடுகள் என வகைப்படுத்தப்படுகிறது.

**6. சுகாதாரப் பொருளாதாரம் :**

சுகாதாரப் பொருளாதாரம் என்பது நோய் தடுப்பு, நோய் நீக்கும் நடவடிக்கைகள், மருத்துவ ஆராய்ச்சி, கல்வி, கிராமப்புற சுகாதாரம், இவற்றிற்கான வரவு செலவு திட்ட ஒதுக்கீடாகும்.

**7. சுற்றுச்சூழல் பொருளாதாரம் :**

சுற்றுச்சூழல், பொருளியலில் சூழலியல், பொருளியல் சுற்றுப்புறச் சூழல் ஆகியவற்றின் தொடர்புடைய பிரச்சனைகளைப் பற்றி படிக்கிறது.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



**3. பொருளியலின் பல்வேறு பிரிவுகளை விளக்குக.** [மார்ச்-2020] [மே-2022]

**விடை : பொருளியலின் உட்பிரிவுகள் :**

**1. நுகர்வு :**

- மனித விருப்பங்களை நிறைவு செய்யும் நுகர்வு. பொருளாதார நடவடிக்கையின் துவக்க நிலையாகும்.
- இந்தப் பகுதியில் நுகர்வோரின் நடத்தை , குறைந்து செல் பயன்பாடு, நுகர்வோர் உபரி. போன்ற பல விதிகள் விளக்கப்படுகிறது.

**2. உற்பத்தி ;**

1. உள்ளீடுகளை , வெளியிடுகளாக மாற்றும் செயல்பாடே உற்பத்தி எனப்படும்.
2. உள்ளீடுகள் என்பது நிலம் , உழைப்பு . மூலதனம், மற்றும் தொழில் அமைப்பு ஆகும்.
3. உள்ளீடுகள் ,வெளியீடுகளுக்கு உள்ள உறவு இப்பிரிவில் இடம்பெறுகிறது.

**3.பரிமாற்றம் ;**

1. பரிமாற்றம் என்பது பல்வேறு அங்காடி அமைப்புகளின் மூலம் விலைத்தீர்மானம் தொடர்புடையது.
2. இதன் பிரிவு வணிகம் , மற்றும் வர்த்தகம் ஆகும்.
3. உற்பத்தி செய்யப்பட்ட பண்டங்கள் நுகர்வோருக்கு கிடைக்கும் போது நுகர்வு சாத்தியமாகிறது.

**4. பகிர்வு ;**

1. உற்பத்தி என்பது உற்பத்திக் காரணிகளின் பங்களிப்பு மூலம் கிடைக்கும் விளைவாகும்.
2. உற்பத்தி செய்யப்பட்ட செல்வங்கள் உற்பத்தி காரணிகளுக்கு பகிர்ந்தளிக்கப்படுகின்றன.
3. காரணிகளுக்கு ஊதியங்களாக வாரம்,வட்டி,இலாபம் வழங்கப்படுகிறது.
4. உற்பத்திக் காரணிகள் விலைத் தீர்மானம் நிர்ணயிக்கப்படுகிறது.

---

**4. நல இலக்கணம் பற்றிய விளக்கமும், சிறப்பம்சங்கள் மற்றும் திறனாய்வையும் விளக்குக.** [செப்-2020]

**நல இலக்கணம் ஆல்ஃபிரட் மார்ஷல்**

- ஆல்ஃபிரட் மார்ஷல் (1842-1924) தன்னுடைய "பொருளியல் கோட்பாடுகள்" (1890) என்ற நூலில் பொருளியலை கீழ்வருமாறு வரைந்துள்ளார்.
- "அரசியல் பொருளியல் அல்லது பொருளியல் என்பது மனிதனின் அன்றாட நடவடிக்கையை படிப்பதும், பொருள் சார் நலனை அடைவதின் பொருட்டு தனிமனிதன் மற்றும் சமுதாயத்தின் செயல்பாட்டை குறித்து ஆராய்வதும் ஆகும். பொருளியல் ஒருபுறம் செல்வத்தைப் பற்றியும், முக்கியமான மற்றொருபுறம் மனிதனைப் பற்றியும் ஆராய்கிறது".

**மார்ஷல் வரையறையின் சிறப்பம்சங்கள்:**

- அனைத்து பொருளாதார நடவடிக்கைகளுக்கும் முதலும், முடிவுமானது செல்வமே என்று பொருளியலில் கருதப்படவில்லை.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



- பொருளியல் சாதாரண மனிதனின் நடத்தையைப் பற்றியதே; அந்தச் சாதாரண மனிதர்கள் அன்பினால் கட்டுப்பட்டவர்களேயன்றி, உச்சபட்ச பணம் பெறுவதை நோக்கிச் செல்பவர்கள் அல்லர்.
- பொருளியல் ஒரு சமூக அறிவியல் ஆகும். அது சமுதாயத்தில் ஒருவர் மற்றொருவர் மீது செலுத்தும் ஆதிக்கத்தைப் பற்றிப் படிக்கிறது.

**திறனாய்வு:**

- மார்ஷல், பொருள்சார் நலனுக்கு மட்டுமே முக்கியத்தவம் அளித்துள்ளார். அவர் பொருள்சாரா நலனைத் தரக்கூடிய மருத்துவர், ஆசிரியர் போன்றோரது பணிகளைக் கருத்தில் கொள்ளவில்லை. ஆனால், அவர்களது பணிகளும் மனித நலனை மேம்படுத்துகிறது.
- பொருள் சாரா பணிகளுக்கு வெகுமதியாக அளிக்கப்படும் பணத்தினைப் பற்றி, மார்ஷல் தனது கூலிக் கோட்பாட்டில் ஏதும் கூறாமல் புறக்கணித்துவிட்டார்.
- மார்ஷலின் இலக்கணமானது நலன் என்ற கருத்தை அடிப்படையாகக் கொண்டது. ஆனால், நலன் என்பது தெளிவுற வரையறுக்கப்படவில்லை. நலன் என்பது மனிதருக்கு மனிதர், நாட்டுக்கு நாடு, காலத்திற்கு காலம் வேறுபடக் கூடியது. மக்கள் நலனை மேம்படுத்தும் மற்றும் மேம்படுத்தாத பொருட்களைப் பற்றி மார்ஷல் தெளிவாக வேறுபடுத்திக் காட்டியுள்ளார்.
- எனினும், நலன் என்பது தனி மனிதனோ அல்லது மனிதர்களின் குழுவோ மகிழ்ச்சியாகவோ அல்லது வசதியாகவோ வாழ்வதாகும். தனிமனிதன் நலன் அல்லது நாட்டின் நலனானது அந்த நாடு கொண்டுள்ள செல்வ இருப்பை மட்டுமே சார்ந்தது அல்ல. அந்த நாட்டின் அரசியல், சமூக மற்றும் கலாச்சார நடவடிக்கைகளையும் சார்ந்ததாகும்.

***** ***** *****

***



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

அத்தியாயம் 2

# நுகர்வுப் பகுப்பாய்வு

## சொற்களஞ்சியம் (Glossary)

| | | |
|---|---|---|
| 1. | நுகர்வு | ஒருவரின் விருப்பங்களை பூர்த்தி செய்ய பண்டங்கள் மற்றும் பணிகளை பயன்படுத்துவது. |
| 2. | தேவை | வாங்க வேண்டும் என்ற விருப்பமும், வாங்கும் திறனும் வாங்கும் எண்ணமும் கூடியது தேவை ஆகும். |
| 3. | பயன்பாடு | பண்டங்கள் மற்றும் பணிகளை நுகரும் போது நுகர்வோருக்குக் கிடைப்பதாக நுகர்வோர் கருதுவது. விருப்பத்தை நிறைவு செய்யும் ஆற்றல் |
| 4. | இறுதிநிலை பயன்பாடு | இறுதியான அலகை நுகர்வதால் பெறும் பயன்பாடு இறுதிநிலை பயன்பாடு ஆகும். |
| 5. | தேவை நெகிழ்ச்சி | தேவையில் ஏற்படும் மாற்ற விகிதத்தை விலையில் ஏற்படும் மாற்ற விகிதத்தால் வகுக்க கிடைப்பது |
| 6. | நுகர்வோர் எச்சம் | ஒரு பொருளுக்கு நுகர்வோர் கொடுக்க விரும்பும் விலைக்கும் உண்மையில் கொடுக்கும் விலைக்கும் உள்ள வித்தியாசம் |
| 7. | சமநோக்கு வளைகோடுகள் | ஒரு வளைகோட்டில் உள்ள இரு பண்டங்களின் அனைத்து கலவையும் நுகர்வோருக்கு சமஅளவு திருப்தியைத் தருமாயின் அது சமநோக்கு வளைகோடாகும். |
| 8. | சமநோக்கு தொகுதி | பல சமநோக்கு வளைகோடுகளின் தொகுப்பாகும். மேலே உள்ள சமநோக்கு வளைகோடு அதிக அளவு திருப்தியையும் கீழே உள்ள சமநோக்கு வளைகோடு குறைந்த அளவு திருப்தியையும் குறிக்கின்றன. |
| 9. | விலைக்கோடு அல்லது வரவுசெலவுக் கோடு | கொடுக்கப்பட்ட விலை மற்றும் வருவாயில் நுகர்வோரின் இரண்டு பண்டங்களுக்கான பல்வேறு கலவைகளின் புள்ளிகளின் இணைப்பே ஆகும். |
| 10. | நுகர்வோர் சமநிலை | நுகர்வோர் தனது வருமானத்தின் முழுமையும் பண்டங்களை வாங்க செலவிடுவதன் மூலம் அதிலிருந்து அதிகபட்ச திருப்தியை பெறுகின்ற புள்ளியே நுகர்வோர் சமநிலைப்புள்ளி ஆகும். அச்சமநிலையில் இருந்து அவர் விலகமாட்டார் |



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



## அரசு பொதுத் தேர்வு - மார்ச் 2023

[கால அளவு : 3.00 மணி நேரம்] [மொத்த மதிப்பெண்கள் : 90]

### பகுதி - I

குறிப்பு : i) அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.
ii) கொடுக்கப்பட்டுள்ள மாற்று விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும். 20 x 1 = 20

1. பொருளியலில் கணிதத்தை முதன்முதலாக பயன்படுத்தியவர் _______
அ) ஆடம் ஸ்மித் ஆ) சர் வில்லியம் பெட்டி இ) இர்விங் பிஷர் ஈ) ஜியோவானி செவா

2. இரண்டு முற்றிலும் வேறுபட்ட தன்மைகளை தொடர்புபடுத்தி குறிப்பது:
அ) இரட்டை தன்மை ஆ) நுட்பம் இ) சமமின்மை ஈ) சார்ந்திருப்பு

3. ஓர் அலகு பொருளை கூடுதலாக விற்பதால் கிடைக்கும் வருவாய் _______ வருவாயாகும்.
அ) இறுதிநிலை ஆ) இலாபம் இ) மொத்த ஈ) சராசரி

4. "தமிழ்நாட்டின் நுழைவு வாயில்" என்று அழைக்கப்படுவது _______
அ) தூத்துக்குடி ஆ) கோயம்புத்தூர் இ) சிவகாசி ஈ) சேலம்

5. உழைப்பாளருக்கான வெகுமதி
அ) இலாபம் ஆ) வாரம் இ) வட்டி ஈ) கூலி

6. விவசாய உற்பத்தி அங்காடிக் குழு என்பது _______
அ) ஆலோசனைக் குழு ஆ) சட்டபூர்வமான குழு இ) (அ) மற்றும் (ஆ) ஈ) எதுவுமில்லை

7. "இந்தியாவின் பசுமைப் புரட்சியின் தந்தை" என்றழைக்கப்படுபவர்
அ) விஸ்வேஸ்வரையா ஆ) M.S. சுவாமிநாதன் இ) N.R. விஸ்வநாதன் ஈ) காந்தி

8. 1951 ஆம் ஆண்டு மக்கள் தொகைப் பெருக்க வீதம் ______ என அழைக்கப்படுகிறது.
அ) நகரமயமாதல் வருடம் ஆ) சிறு பிளவு ஆண்டு
இ) பெரும் பிரிவினை வருடம் ஈ) மக்கள் தொகை வெடிப்பு வருடம்

9. ______ என்ற அமெரிக்க பொருளியல் அறிஞர் 1907 - ல் இடர் தாங்கும் இலாபக் கோட்பாட்டை எடுத்துரைத்தார்.
அ) J.B. கிளார்க் ஆ) பிராங்க் H. நைட் இ) ஜான் ரே ஈ) F.B. ஹாலே

10. ஒரு புத்தக விற்பனையாளர் ஒரு புத்தகம் ரூ. 10 வீதம் 40 புத்தகங்களை விற்கிறார் எனில் அவருக்கு கிடைக்கும் மொத்த வருவாய்:
அ) ரூ. 300 ஆ) ரூ. 100 இ) ரூ. 400 ஈ) ரூ. 200

11. "இந்திய விவசாயி கடனாளியாக பிறந்து, கடனாளியாக வாழ்ந்து, கடனாளியாக இறந்து, கடனையே சந்ததிக்கு விட்டுச் செல்கிறான்." - இச்சொற்றொடரைக் கூறியவர் யார்?
அ) அமர்தியா சென் ஆ) ஆடம் ஸ்மித் இ) சர் மால்கம் டார்லிங் ஈ) காந்தி

12. "ஆசியாவின் டெட்ராய்ட்" என்று அழைக்கப்படும் நகரம் _______
அ) சேலம் ஆ) சென்னை இ) திருப்பத்தூர் ஈ) கோயம்புத்தூர்

13. பொருளின் விலைக்கும் அளிப்பிற்கும் இடையே உள்ள தொடர்பு
அ) பூஜ்யம் ஆ) எதிர்மறை இ) அதிகரிக்கும் ஈ) நேர்மறை

14. கலப்புப் பொருளாதாரம் என்பது
அ) பொதுத்துறை மற்றும் வங்கிகள் ஆ) தனியார் துறை மற்றும் வங்கிகள்
இ) பொதுத்துறைகள் மட்டும் ஈ) பொது மற்றும் தனியார் துறைகள் சேர்ந்து செயல்படுவது

15. தகுவிலை ரூ. 250 ஆகவும் மற்றும் உண்மை விலை ரூ. 200 ஆகவும் உள்ளது எனில் நுகர்வோர் எச்சத்தின் மதிப்பு
அ) 200 ஆ) 375 இ) 50 ஈ) 175



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



16. "நாடுகளின் செல்வம் மற்றும் காரணங்களைக் குறித்த ஒரு விசாரணை" என்ற நூலின் ஆசிரியர்:
அ) இலயனல் இராபின்ஸ் ஆ) ஆல்ஃபிரட் மார்ஷல் இ) பால் அ சாமுவேல்சன் ஈ) ஆடம் ஸ்மித்

17. காப்-டக்லஸ் உற்பத்தி சார்பு எதனை அடிப்படையாகக் கொண்டது?
அ) குறைந்து செல் விகித விளைவு விதி ஆ) மாறா விகித அளவு விளைவு விதி
இ) வளர்ந்து செல் விகித விளைவு விதி ஈ) மேற்காணும் அனைத்தும்

18. உழவர் கடன் அட்டையைப் பயன்படுத்தி விவசாயிகள் எந்த வங்கியில் கடன் பெற முடியும்?
அ) பிராந்திய கிராமப்புற வங்கிகளில் ஆ) பொதுத்துறை வங்கிகளில்
இ) கூட்டுறவு வங்கிகளில் ஈ) இவை அனைத்தும்

19. தனிக்கருத்திலிருந்து பொதுக்கருத்து பெறும் முறை:
அ) இயல்புரை அறிவியல் ஆ) பகுத்தாய்வு முறை இ) நெறியுரை அறிவியல் ஈ) தொகுத்தாய்வு முறை

20. நிறுவனத்தின் சமநிலை என்பது:
அ) MC < MR ஆ) MC = MR இ) MR = Price ஈ) MC > MR

## பகுதி - II

**எவையேனும் ஏழு வினாக்களுக்கு விடையளிக்கவும். வினா எண் 30 - க்கு கட்டாயமாக விடையளிக்கவும். 7 x 2 = 14**

21. கிஃபன் பொருள்கள் எவை? அவை ஏன் அவ்வாறு அழைக்கப்படுகின்றன? அத்தியாயம்-2
22. அளிப்பு கோடு மேல்நோக்கி செல்வதன் காரணம் என்ன? அத்தியாயம்-2
23. மூழ்கும் செலவுகள் என்றால் என்ன? அத்தியாயம்-4
24. கீழ்க்கண்ட நிறுவனத்தின் தேவைகோடு வரைக. அத்தியாயம்-5
அ) நிறைவு போட்டி ஆ) முற்றுரிமை
25. முன்னேறிய பொருளாதாரத்தின் இயல்புகள் எவையேனும் இரண்டினைக் கூறுக. அத்தியாயம்-7
26. சுதந்திரம் அடைவதற்கு முன் இந்தியாவில் காணப்பட்ட பல்வேறு வகையான நில உடைமை முறைகளின் பெயர்களை எழுதுக. அத்தியாயம்-8
27. மத்திய அரசு அறுவடைக்குப் பின் மேற்கொள்ளும் நடவடிக்கைகளின் உட்கூறுகளைக் கூறுக. அத்தியாயம்-9
28. தமிழ்நாட்டின் அணுமின் நிலையங்கள் யாவை? அத்தியாயம்-11
29. MS Word - ன் முக்கிய அம்சங்கள் யாவை? அத்தியாயம்-12
30. தேசிய ஊரக நல அமைப்பு பற்றி எழுதுக. அத்தியாயம்-10

## பகுதி - III

**எவையேனும் ஏழு வினாக்களுக்கு விடையளிக்கவும். வினா எண் 40-க்கு கட்டாயமாக விடையளிக்கவும். 7 x 2 = 14**

31. பொருளியலைப் பற்றிய பற்றாக்குறை இலக்கணத்தை விளக்குக. மேலும் அதனை மதிப்பீடு செய்க. அத்தியாயம்-1
32. தேவை விரிவு மற்றும் சுருக்கத்தை வேறுபடுத்துக. அத்தியாயம்-2
33. அளிப்பு நெகிழ்ச்சியை நிர்ணயிக்கும் காரணிகள் யாவை? அத்தியாயம்-3
34. வாய்ப்புச் செலவை எடுத்துக்காட்டுடன் வரையறுக்கவும். அத்தியாயம்-4
35. நிறுவனம் மற்றும் தொழிற்சாலைக்கு இடையே உள்ள வேறுபாடுகள் யாவை? அத்தியாயம்-5
36. பணத்தேவைக்கான நோக்கங்கள் யாவை? அத்தியாயம்-6
37. கிராம சர்வோதயா - சிறு குறிப்பு வரைக. அத்தியாயம்-7
38. GST என்றால் என்ன? அதன் நன்மைகளை எழுதுக. அத்தியாயம்-9
39. MUDRA வங்கியின் நோக்கங்களை பட்டியலிடுக. அத்தியாயம்-10
40. DMP முறை குறித்து விளக்குக. அத்தியாயம்-10



www.Padasalai.Net
Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



## பகுதி - IV

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.** **7 x 5 = 35**

41. அ) பொருளியலின் தன்மை மற்றும் எல்லையை விவரிக்கவும். அத்தியாயம்-1

**(அல்லது)**

ஆ) தமிழ்நாட்டின் பொதுத்துறை போக்குவரத்து முறையினை விளக்குக. அத்தியாயம்-11

42. அ) ஊரக பொருளாதாரத்தின் பண்புகள் விசித்திரமானவை - விவாதிக்கவும். அத்தியாயம்-10

**(அல்லது)**

ஆ) தேவை விதி மற்றும் அதன் விதிவிலக்குகளை விவரிக்கவும். அத்தியாயம்-2

43. அ) சம அளவு உற்பத்தி கோட்டின் பண்புகளை வரைபடத்துடன் விவரிக்கவும். அத்தியாயம்-3

**(அல்லது)**

ஆ) சிறப்பு பொருளாதார மண்டலங்களின் நோக்கங்களையும், பண்புகளையும் விளக்குக. அத்தியாயம்-9

44. அ) இந்திய ஐந்தாண்டுத் திட்டங்களின் செயல்பாடுகளை விவரிக்கவும். அத்தியாயம்-8

**(அல்லது)**

ஆ) பல்வேறுபட்ட விலை நிலைகளில் AR மற்றும் MR கோடுகளுக்கிடையேயான தொடர்பை விளக்குக. அத்தியாயம்-4

45. அ) நிறைவுப் போட்டியின் இயல்புகளை விளக்குக. அத்தியாயம்-5

**(அல்லது)**

ஆ) காந்தியப் பொருளாதாரக் கருத்துகளை விளக்குக. அத்தியாயம்-7

46. அ) கீன்சின் வட்டிக்கோட்பாட்டை விவரிக்கவும். அத்தியாயம்-6

**(அல்லது)**

ஆ) பொருளியல் துறையில் தகவல் தொழில்நுட்பங்கள் எவ்வாறு பயன்படுத்தப்படுகின்றன? அத்தியாயம்-12

47. அ) கிராமர் விதியைப் பயன்படுத்தி சமன்பாடுகளின் $x$ மற்றும் $y$ மதிப்புகளைக் காண்க. $x + 3y = 1$ மற்றும் $3x - 2y = 14$. அத்தியாயம்-12

**(அல்லது)**

ஆ) பேரளவு தொழிற்சாலைகள் குறித்து விரிவாக விளக்குக. அத்தியாயம்-8

www.Padasalai.Net



Kindly send me your study materials to padasalai.net@gmail.com